**அலகு : - நீளம்**

**பாடவேளைகளின் எண்ணிக்கை : 08**

- பாடப்புத்தகத்தில் 43, 44 ஆம் பக்கங்களை நன்றாக கற்றுக்கொள்க. நீளம், அகலம், உயரம், ஆழம், தடிப்பு என்பன பயன்படுத்தப்படும் சந்தர்ப்பத்திற்கு ஒரு உதாரணம் வீதம் எழுதுக.
- நீளத்தை அளப்பதற்குப் பயன்படுத்தப்படும் அளக்கும் கருவிகள் 5 தருக.

கீழே தரப்பட்டுள்ள நீளங்களை அளப்பதற்குப் பொருத்தமான அலகை தெரிவு செய்து இணைக்க.

| **நீளம்** | **அளக்கும் அலகு** |
|---|---|
| நாணயமொன்றின் தடிப்பு | மில்லிமீற்றர் (mm) |
| நிமாலியின் உயரம் | சென்ரிமீற்றர் (cm) |
| புத்தகமொன்றின் நீளம், அகலம் | மீற்றர் (m |
| இரு நகரங்களுக்கிடையிலுள்ள தூரம் | கிலோமீற்றர் (km) |
| கடல் அடியின் ஆழம் | |

- பாடப்புத்தகத்தில் 46, 47, 48 ஆம் பக்கங்களிலுள்ள பயிற்சி 15.2 ஐப் பூரணப்படுத்துக. உமக்கு ஏற்படும் பிரச்சினைகளை ஆசிரியர் / ஆசிரியை உடன் கலந்துரையாடி தீர்த்துக் கொள்க.

- பாடப்புத்தகத்தில் 48, 49 ஆம் பக்கங்களை கற்றுக் கொள்க.

$10\text{ mm} = 1\text{ cm}$ எனவும் $1\text{mm} = \frac{1}{10}\text{cm}$ எனவும் $1\text{mm} = 0.1\text{ cm}$ எனவும் அறிந்து கொள்க.

**சென்ரிமீற்றர்களில் (cm) தரப்பட்டுள்ள நீளத்தை மில்லிமீற்றர்களில் (mm) காட்டுவதற்கு சென்ரிமீற்றர்களில் தரப்பட்டுள்ள பெறுமானத்தைப் 10 இனால் பெருக்க வேண்டும்.**

உதா : - 7 cm ஐ மில்லிமீற்றர்களில் காட்டுக.

$$7\text{ cm} = 7 \times 10\text{ mm}$$
$$= 70\text{ mm}$$

கீழே தரப்பட்டுள்ள நீளங்களை மில்லிமீற்றர்களில் காட்டுக.

1) 5 cm 2) 8 cm 3) 9 cm 4) 10 cm 5) 24 cm

- கீழே தரப்பட்டுள்ள நீளங்களை சென்ரிமீற்றர், மில்லிமீற்றர்களில் காட்டுக.

உதா :- 15 mm = 1 cm 5 mm

1) 12 mm 2) 25 mm 3) 37 mm 4) 95 mm 5) 105 mm

**மில்லிமீற்றர்களில் (mm) தரப்பட்டுள்ள நீளத்தை சென்ரிமீற்றர்களில் (cm) காட்டுவதற்கு மில்லிமீற்றர்களில் தரப்பட்டுள்ள பெறுமானத்தைப் 10 இனால் வகுக்க வேண்டும்.**

உதா :- 80 mm ஐ சென்ரிமீற்றர்களில் காட்டுக.

80 mm $= \frac{80}{10}$ cm

= 8 cm

கீழே தரப்பட்டுள்ள நீளங்களை சென்ரிமீற்றர்களில் காட்டுக.

1) 50mm 2) 70 mm 3) 150 mm 4) 380 mm 5) 550 mm

கீழுள்ளவற்றில் தொகுதி **A** இலுள்ள ஒவ்வொரு நீளத்திற்கும் சமமான பெறுமதிகளை தொகுதி **B** இலிருந்து தெரிந்து இணைக்க.

| A | B |
|---|---|
| 7 cm | 35 mm |
| 3 cm 5 mm | 70 mm |
| 1 cm 9 mm | 127 mm |
| 12 cm 7 mm | 19 mm |
| 13 cm 8mm | 138 mm |

- பாடப்புத்தகத்தில் 51, 52 ஆம் பக்கங்களிலுள்ள பயிற்சி 15.3 ஐப் பூரணப்படுத்துக.

**மீற்றர்களில் (m) தரப்பட்டுள்ள நீளத்தை சென்ரிமீற்றர்களில் (cm) காட்டுவதற்கு மீற்றர்களில் தரப்பட்டுள்ள பெறுமானத்தைப் 100 இனால் பெருக்க வேண்டும்.**

உதா :- 8 m ஐ சென்ரிமீற்றர்களில் காட்டுக.

8 m = 8 X 100 cm

= 800 cm

கீழே தரப்பட்டுள்ள நீளங்களை சென்ரிமீற்றரகளில் (cm) காட்டுக.

1) 7m 2) 6m 25cm 3) 7m 18 cm 4) 6.75m 5) 6.85m

| |
|---|
| **சென்ரிமீற்றர்களில்** (cm) **தரப்பட்டுள்ள நீளத்தை மீற்றர்களில்** (m) **காட்டுவதற்கு சென்ரிமீற்றர்களில் தரப்பட்டுள்ள பெறுமானத்தைப் 100 இனால் வகுக்க வேண்டும்.** |

உதா :- 700c m ஐ மீற்றர்களில் (m) காட்டுக.

700cm $= \frac{700}{100}$ m

= 7m

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு நீளத்தையும் மீற்றர்களில் (m) காட்டுக.

1) 200 cm 2) 1100 cm 3) 79 cm 4) 900 cm 5) 241 cm

- பாடப்புத்தகத்தில் 54 ஆம் பக்கத்திலுள்ள பயிற்சி 15.4 ஐப் பூரணப்படுத்துக. உமக்கு ஏற்படும் பிரச்சினைகளை ஆசிரியர் / ஆசிரியை உடன் கலந்துரையாடி தீர்த்துக் கொள்க.

| |
|---|
| **கிலோமீற்றர்களில்** (km) **தரப்பட்டுள்ள நீளத்தை மீற்றர்களில்** (m) **காட்டுவதற்கு கிலோமீற்றர்களில் தரப்பட்டுள்ள பெறுமானத்தைப் 1000 இனால் பெருக்க வேண்டும்.** |

உதா :- 5 km ஐ மீற்றர்களில் (m) காட்டுக.

5 km = 5 X 1000 m

= 5000 m

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு நீளத்தையும் மீற்றர்களில் (m) காட்டுக.

1) 6km 2) 3km 750m 3) 2km 575m 4) 4.2km 5) 8.95km

| |
|---|
| **மீற்றர்களில்** (m) **தரப்பட்டுள்ள நீளத்தை கிலோமீற்றர்களில்** (km) **காட்டுவதற்கு மீற்றர்களில் தரப்பட்டுள்ள பெறுமானத்தைப் 1000 இனால் வகுக்க வேண்டும்.** |

உதா :- 4000m ஐ கிலோமீற்றர்களில் (km) காட்டுக.

4000m $= \frac{4000}{1000}$ $k$m

= 4 km

3875m ஐ கிலோமீற்றர்களில் (km) காட்டுக.

3875m $= \frac{3875}{1000}$ $k$m

= 3.875 km

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு நீளத்திற்கும் சமமான பெறுமதியைத் தெரிந்து இணைக்க.

| | |
|---|---|
| 6000 m | 5.5 km |
| 5500 m | 6 km |
| 9000 m | 10 km |
| 10000 m | 4.3 km |
| 4300 m | 9 km |

- பாடப்புத்தகத்தில் 56 ஆம் பக்கத்திலுள்ள பயிற்சி 15.5 ஐயும் 57 ஆம் பக்கத்திலுள்ள பயிற்சி 15.6 ஐயும் பூரணப்படுத்துக. . உமக்கு ஏற்படும் பிரச்சினைகளை ஆசிரியர் / ஆசிரியை உடன் கலந்துரையாடி தீர்த்துக் கொள்க.

கீழே தரப்பட்டுள்ள நீளங்களைக் கூட்டுக.

உதா :-

| | m | cm |
|---|---|---|
| | 2 | 75 |
| + | 1 | 40 |
| | 4 | 15 |

115 cm = 1m 15cm

| | m | cm |
|---|---|---|
| | 9 | 53 |
| + | 2 | 49 |
| | 12 | 02 |


| | m | cm |
|---|---|---|
| | 8 | 35 |
| + | 2 | 37 |
| | | |

| | m | cm |
|---|---|---|
| | 4 | 65 |
| + | 3 | 50 |
| | | |

| | m | cm |
|---|---|---|
| | 7 | 18 |
| + | 3 | 95 |
| | | |

**மூடிய தளவுரு ஒன்றின் எல்லாப் பக்கங்களினதும் நீளங்களின் கூட்டுத்தொகை அதன் சுற்றளவு எனப்படும்.**

உதா :- உருவின் சுற்றளவைக் காண்க.




சுற்றளவு = 4cm 3 mm + 8cm 7 mm + 7cm 5 mm + 9cm 8 mm = 30cm 3 mm

- பாடப்புத்தகத்தில் 62, 63, 64 ஆம் பக்கங்களிலுள்ள பயிற்சி 15.7 ஐப் பூரணப்படுத்துக. உமக்கு ஏற்படும் பிரச்சினைகளை ஆசிரியர் / ஆசிரியை உடன் கலந்துரையாடி தீர்த்துக் கொள்க.